## தனித்துவம் வாய்ந்த வில்லா திட்டம் மூலம்

# கோவையில் அடியெடுத்து வைக்கிறது காஸா கிராண்டே

கோவை, பிப்.10-

சென்னையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றான காஸா கிராண்டே பிரைவேட் லிமிடெட் தனித்துவம் வாய்ந்த வில்லா திட்டம் மூலம் கோவையில் அடியெடுத்து வைக்கிறது.

இது குறித்து நிர்வாக இயக்குனர் அருண்குமார் கூறுகையில், சென்னையை அடுத்து வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை அளிக்க எங்களது அடுத்த வாய்ப்பாக கோவை அமைந்தது. நாங்கள் 2012-13 நிதியாண்டிற்கு இந்த மண்டலத்தில் ரூ.50 கோடி மற்றும் அடுத்த சில ஆண்டுகளில் 200 கோடிக்கும் அதிகமான திட்டங்களுடன் விற்றுமுதலுக்கு இலக்கு வைத்துள்ளோம் என்றார்.

நிர்வாக பங்குதாரர் செந்தில்குமார் கூறுகையில், வில்லால் மற்றும் வரிசை வீடுகள் போன்ற சொகுசு வீடுகளுக்கான ரியல் எஸ்டேட் மார்க்கெட் சாத்திய கூறுகளை கொண்டது கோயம்புத்தூர். 5 ஏக்கரில் அமையவுள்ள இந்த திட்டம் 3 பெட்ரூம்களை கொண்ட 90 பாதி தனி வில்லா மற்றும் 4 பெட்ரூம்களை கொண்ட தனி வில்லாக்களை உள்ளடக்கியது. 1600 -சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை கொண்ட இந்த வில்லாக்களின் விலை ரூ.50 லட்சம் முதல் 70 லட்சம் ஆகும். இத்திட்டம் காளப்பட்டி குரும்பபாளையம் சாலையில் உள்ள ஏர்போர்ட் ஜங்சனில் இருந்து 7 கி.மீ தொலைவில் அவினாசி சாலையில் அமைந்துள்ளது. இங்கு நீச்சல் குளம், கிளப் ஹவுஸ், விருந்தினர் அறைகள் ஆகியவை அமையவுள்ளன என்றார்.




காஸா கிராண்டே பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குனர் அருண்குமார், நிர்வாக பங்குதாரர் செந்தில்குமார் ஆகியோர் தனித்துவம் வாய்ந்த வில்லா திட்டம் மூலம் கோவையில் அடியெடுத்து வைப்பது குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்கள்.